# SOUTH EASTERN UNIVERSITY OF SRI LANKA

## SECOND YEAR EXAMINATION IN BACHELOR OF ARTS (EXTERNAL) - 2009 / 2010
## HELD IN DECEMBER - 2010

## ECS 2.12 – ECONOMIC HISTORY OF SRI LANKA

எவையேனும் **ஐந்து** வினாக்களுக்கு விடையளிக்குக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

01. போர்த்துக்கேயர் பெற்றுக்கொண்ட வருமான மூலங்களை மதிப்பீடு செய்து, அவர்களின் நிதி முகாமைத்துவத்தின் தனித்துவமான பண்புகளை பரிசீலனை செய்க. (20 புள்ளிகள்)

02. இலங்கையின் உள்நாட்டு விவசாய அபிவிருத்தியில் ஒல்லாந்தரினால் நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கைகளை விளக்குக. இக்கொள்கைகளை அமுல்படுத்துவதற்கு தடையாய் அமைந்த காரணிகளை ஆராய்க. (20 புள்ளிகள்)

03. “பிரித்தானியருடன் ஒப்பிடுகையில் இலங்கை சுதேசிகள் இறப்பர் மற்றும் தெங்கு பயிரிடலில் அதிக ஈடுபாடு கொண்டிருந்தனர்.” இக்கூற்றுடன் உடன்படுகின்றீரா? விளக்குக. (20 புள்ளிகள்)

04. பிரித்தானியர் கால கோப்பிப் பயிரிடலின் வளர்ச்சியையும் வீழ்ச்சியையும் மதிப்பிடுக. (20 புள்ளிகள்)

05. கோல்புறூக் - கமரன் சிபார்சுகளைக்கூறி, அவர்களின் சிபார்சுகள் பொருளாதாரக் குறிக்கோளை அடைவதில் எந்தளவுக்கு வெற்றியளித்துள்ளன என்பதை விளக்குக. (20 புள்ளிகள்)

06. (அ) “தேயிலை விலைகள் குறைவடைந்தபோதும் இலங்கையின் தேயிலைக் கைத்தொழில் இலாபகரமாகவே அமைந்திருந்தது.” இக்கூற்றினை 1885 – 1895 காலப்பகுதியினை ஆதாரமாகக் கொண்டு விளக்குக. (10 புள்ளிகள்)

(ஆ) 1907 ஆம் ஆண்டிற்கும் 1932 ஆம் ஆண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் தேயிலை சந்தைப்படுத்தல் தொடர்பாக இலங்கையின் தேயிலைத் தோட்ட முதலீட்டாளர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளைப் பரிசீலனை செய்க. (10 புள்ளிகள்)

07. (அ) பிரித்தானியர் கால இலங்கையின் போக்குவரத்துத் துறை அபிவிருத்தியை மதிப்பீடு செய்க. (10 புள்ளிகள்)

(ஆ) பிரித்தானியர் கால இலங்கையின் பெருந்தோட்டத் துறை நோக்கிய இந்தியத் தொழிலாளர்களின் குடிப்பெயர்வின் விளைவுகளை மதிப்பீடுசெய்க. (10 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றுக்கு விளக்கக் குறிப்புக்கள் எழுதுக.

(அ) மாற்றுப் பெருந்தோட்டப் பயிராக சிங்கோனாச் செய்கை

(ஆ) இரட்டைப் பொருளாதாரம்

(இ) இலங்கையின் பண்டைய நீர்ப்பாசன முறைமை

(ஈ) ஒல்லாந்தர் கால வரி வருமானங்கள் (தலா 05 புள்ளிகள்)

***